**டிசம்பர் – 05**

# TNPSC துளிகள்

- திருச்சி, ஆம்பூர், திருப்பூர், வேலூர் மற்றும் தமிழ்நாட்டின் பிற நகரங்களில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 206 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனுதவியை முன்கூட்டியே வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank - ADB) ஒப்புக் கொண்டுள்ளது.
    - மேலும் இந்த நிதியுதவியானது மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குதலுக்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறன்களையும் வெகுவாக பலப்படுத்த இருக்கின்றது.
- இந்தியக் கடற்படையானது கொல்கத்தாவில் துபோலேவ் TU - 142 என்ற விமான அருங்காட்சியகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. TU - 142 என்பது ரஷ்யாவால் (முன்னர் சோவியத் யூனியன்) தயாரிக்கப்பட்ட கடல்சார் உளவு மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு விமானங்களாகும்.
- ஸ்வீடனின் மன்னரான 16வது கார்ல் குஸ்டாஃப் மற்றும் ராணி சில்வியா ஆகியோர் மும்பை மற்றும் டெல்லி ஆகிய நகரங்களுக்கு பயணம் செய்வதற்காக இந்தியா வந்துள்ளனர். மேலும் இவர்கள் உத்தரகண்ட் மாநிலத்திற்கும் பயணம் மேற்கொள்ள இருக்கின்றனர்.
- கூகுள் நிறுவனத்தின் இணை நிறுவனர்களான லாரி பேஜ் மற்றும் செர்கே பிரின் ஆகியோர் தங்களது தாய் நிறுவனமான "ஆல்பபெட்" நிறுவனத்தின் தலைமைப் பணியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.
    - கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுந்தர் பிச்சை ஆல்பபெட் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்க உள்ளார்.
- மத்திய பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது நிறுவனங்கள் சட்டம், 2013ன் விதிகளின் படி, சுயாதீன இயக்குநர்களின் தரவு தளத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றது.
    - நிறுவனங்களில் சிறந்த பெருநிறுவன நிர்வாக நடைமுறைகளை உறுதி செய்வதில் சுயாதீன இயக்குநர்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

# தேசியச் செய்திகள்

## இந்திரதனுஷ் 2.0 திட்டம்

- தீவிரப் படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 2.0 (Intensified Mission Indradhanush – IMI) திட்டத்தின் கீழ் எட்டு நோய்களைத் தடுப்பதற்காக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதி முதல் நாடு தழுவிய ஒரு தடுப்பூசி இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- பயனடைவோர் (இலக்காக உள்ளவர்கள்): 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள்.
- இத்திட்டத்தின் நோக்கம்: 27 மாநிலங்களில் உள்ள 272 மாவட்டங்களில் முழுமையான நோய்த் தடுப்பு மருந்து வழங்கக் கூடிய ஒரு இலக்கினை அடைவதற்காக.
- இத்திட்டத்தின் காலம்: 2019 டிசம்பர் மற்றும் 2020 மார்ச் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலகட்டம்.
- IMI தடுப்பூசியானது தொண்டை அழற்சி, இருமல், இழுப்புவாதம், இளம்பிள்ளைவாதம்,

காசநோய், தட்டம்மை, மூளைக் காய்ச்சல் மற்றும் கல்லீரல் அழற்சி (பி வகை) ஆகிய நோய்களை உள்ளடக்கியுள்ளது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் மற்றும் இன்ஃப்ளூயன்ஸா ஆகியவற்றிற்கான தடுப்பூசிகளும் வழங்கப் படுகின்றன.




## நேதாஜி தொடர்பான ஆவணங்கள்


- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் ஆசாத் ஹிந்த் பவுஜ் (இந்திய தேசிய ராணுவம்) ஆகியோர் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் மத்திய அரசு "அதிகாரப் பூர்வமாக வெளியிட்டுள்ளது" என்று மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- இந்த ஆவணங்கள் இந்தியாவின் தேசிய ஆவணக் காப்பகத்தில் வைக்கப் பட்டுள்ளன.
- மொத்தமுள்ள 304 கோப்புகளில், 303 கோப்புகள் www.netajipapers.gov.in என்ற நேதாஜி வலைதளத்தில் ஏற்கனவே பதிவேற்றம் செய்யப் பட்டுள்ளன.

## RTMS கட்சி பதிவுத் தளம்

- இந்தியத் தேர்தல் ஆணையமானது அரசியல் கட்சிகள் மீதான பதிவு கண்காணிப்பு மேலாண்மை அமைப்பை (Registration Tracking Management System - RTMS) நடைமுறைப் படுத்த இருக்கின்றது.
- விண்ணப்பதாரர்களால் அளிக்கப் பட்ட விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை கண்காணிப்பதற்காக ஆன்லைன் (நிகழ்நேர) இணைய தளத்தின் மூலம் இது செயல் படுத்தப்பட இருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல், கட்சிப் பதிவிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், இந்த இணையதளத்தின் மூலம் தங்களது விண்ணப்பத்தின் நிலையைக் கண்காணிக்க முடியும்.

## இந்தியாவின் விபத்துக்குள்ளான விக்ரம் லேண்டர் - நாசா கண்டுபிடிப்பு

- சந்திரனைச் சுற்றி வரும் நாசாவின் செயற்கைக் கோளானது கடந்த செப்டம்பர் மாதத்தில் சந்திரனின் மேற்பரப்பில் விழுந்து நொறுங்கிய இந்தியாவின் விக்ரம் லேண்டரைக் கண்டுபிடித்துள்ளது.
- தனது சந்திரனுக்கான வேவுப் பணி விண்கலத்தினால் எடுக்கப்பட்ட புகைப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது. இது செப்டம்பர் 6 ஆம் தேதியன்று அப்பகுதியில் இருந்த விண்கலத்தின் தாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய குப்பைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.
- இது அப்பகுதியில் உள்ள தளத்தின் நிறத் திட்டு அடங்கிய ஒரு புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளது.
- லேண்டரை அடையாளம் கண்டதற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த சண்முக சுப்பிரமணியன் வெகுவாக பாராட்டப் பட்டார்.




## குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுக்களின் வளர்ச்சி

- மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகமானது குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுவினரின் (Particularly Vulnerable Tribal Groups - PVTGs) விரிவான சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக “PVTGsகளின் வளர்ச்சி” என்ற ஒரு திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இந்தத் திட்டமானது மொத்தமுள்ள 75 PVTGs வகைகளையும் உள்ளடக்கியுள்ளது.
- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்த PVTGsகள் நாட்டில் மொத்தம் 18 மாநிலங்களிலும் ஒரு ஒன்றியப் பிரதேசத்திலும் (அந்தமான் நிக்கோபார் தீவுகள்) பரவியுள்ளனர்.
- இந்த 75 PVTGsகளில் அதிக எண்ணிக்கையிலான PVTGsகள் ஒடிசா (13) மாநிலத்தில் உள்ளனர். இதற்கு அடுத்து அதிக எண்ணிக்கையிலான PVTGsகள் ஆந்திர (12) மாநிலத்தில் உள்ளனர்.
- இந்த PVTGsகளின் பட்டியலில் இருளர் (தமிழ்நாடு ) மற்றும் கோண்டா ரெட்டி (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய பழங்குடியினர் சமீபத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

### Hand-in-Hand பயிற்சி

- ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதலின் கீழ் 'தீவிரவாத எதிர்ப்பு' என்ற கருப் பொருளைக் கொண்ட 8வது இந்தியா - சீன கூட்டுப் பயிற்சியான 'Hand-in-Hand 2019' என்ற பயிற்சியானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 7 முதல் டிசம்பர் 20 ஆம் தேதி வரை மேகாலயாவின் உம்ரோய் நகரில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- மித நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள நிலப்பரப்பில் கூட்டுத் திட்டமிடல் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்வதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.
- 2018 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சியானது சீனாவில் உள்ள செங்டு என்ற நகரில் நடத்தப் பட்டது.
- இந்திய மற்றும் சீனத் துருப்புக்கள் ஆகியவற்றிற்கு இடையே டோக்லாமில் 72 நாட்கள் நீடித்த மோதலின் காரணமாக இந்தப் பயிற்சியானது 2017 ஆம் ஆண்டில் நடைபெற வில்லை.

## சர்வதேசச் செய்திகள்

### சைபீரியாவின் ஆற்றல்

- சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபரான விளாடிமிர் புடின் ஆகியோர் "சைபீரியாவின் ஆற்றல்" எரிவாயுக் குழாய்த் தொடர் என்ற ஒரு புதிய எரிசக்தித் திட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், ரஷ்யாவானது அடுத்த 30 ஆண்டுகளில் 1 டிரில்லியன் கன மீட்டர் இயற்கை எரிவாயுவை சீனாவிற்கு வழங்க இருக்கின்றது.
- இந்த குழாய்த் தொடரானது சைபீரியாவை சீனாவின் ஷாங்காயில் உள்ள யாங்சே நதி கழிமுகத்துடன் இணைக்க இருக்கின்றது.
- இது ரஷ்யா மற்றும் சீனா ஆகிய பங்காளர்களுடன் யூரேசியாவின் ஒரு மிக நெருங்கிய ஆற்றல் ஒருங்கிணைப்பின் சிறப்பு அடையாளமாக விளங்குகின்றது.

### உலகளாவிய புலம்பெயர்ந்தோர் திரைப்படத் திருவிழா

- உலகளாவிய புலம்பெயர்ந்தோர் திரைப்படத் திருவிழாவானது (GMFF - Global Migration Film Festival) டாக்காவில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஒரு நாள் முழுவதும் நடைபெற்ற இந்தத் திருவிழாவில் இடம்பெயர்வு மற்றும் அதன் பல்வேறு அம்சங்கள் குறித்த 15 திரைப்படங்கள் திரையிடப்பட்டன.
- இந்தத் திருவிழாவானது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு (International Organisation of Migrants - IOM) மற்றும் டாக்கா பல்கலைக்கழக திரைப்படச் சங்கம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- IOM என்பது 1951 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் புலம்பெயர்வு அமைப்பாகும்.
- இடம்பெயர்வுப் பிரச்சினையின் முறையான மற்றும் மனிதாபிமான நிலையை உறுதிப்படுத்துவதற்காக இது செயல்படுகின்றது.

### INSTEX - ஈரானுடனான வர்த்தகம்

- பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, நெதர்லாந்து, நார்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் சமீபத்தில் INSTEX ல் இணைந்துள்ளன.
- ஈரானுடனான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு (தொடருவதற்கு) ஐரோப்பிய நிறுவனங்களை அனுமதிப்பதற்காக 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடுகளால் 'வர்த்தகப் பரிமாற்றங்களுக்கு ஆதரவான கருவி (INSTEX - Instrument in Support of Trade Exchanges)' என்ற வர்த்தக வழிமுறை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.
- டாலரின் பயன்பாட்டைத் தவிர்ப்பதன் மூலம் ஈரானுடனான வர்த்தகத்திற்கு எதிராக அமெரிக்காவால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளைத் தவிர்ப்பதற்காக இந்த வழிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பாரிஸைத் தலைமையாகக் கொண்ட இந்த வழிமுறையானது ஒரு தீர்வு காணும் இடமாக செயல்படுகின்றது.
- இது தொடர்ந்து எண்ணெய் வகைகளை விற்பனை செய்யவும், பரிமாற்றத்தின் போது பிற தயாரிப்புகள் அல்லது சேவைகளை இறக்குமதி செய்யவும் ஈரானை அனுமதிக்கின்றது.

## மாநிலச் செய்திகள்

### டான்போ கலை – கேரளா

- கேரளாவில் முற்போக்குத் தன்மையுள்ள விவசாயி ஒருவர் 1976 ஆம் ஆண்டில் இறந்த புகழ்பெற்ற குருவாயூர் கோயில் யானையைச் சித்தரிப்பதற்காக டான்போ கலையை (ஒரு முப்பரிமாண கலை வடிவம்) பயன்படுத்துகின்றார்.
- கிருஷ்ணா காமோட், காந்தகாசலா மற்றும் ஜீரகாசலா போன்ற பல உள்நாட்டு வகை அரிசியைப் பயன்படுத்தி இந்த உருவத்திற்கு அந்த விவசாயி வடிவம் கொடுத்தார்.
- டான்போ கலை என்பது ஜப்பானில் உள்ள இனகடேட் கிராமத்தின் விவசாயிகளால் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் நெல் வயல்களை அழகுபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நெல் பயிர்க் கலையாகும்.
- நெல் பயிர்களை வளர்ப்பதன் மூலம் மோனாலிசா உள்ளிட்ட புகழ்பெற்ற ஓவியங்களின் பிரம்மாண்டமான பிரதிகளை வெவ்வேறு வண்ணங்களின் நெறிகளுடன் இவர்கள் வரைகின்றார்கள்.

## விளையாட்டுச் செய்திகள்

### 6வது பாலன் டி'ஓர் விருது – மெஸ்ஸி

- பார்சிலோனா அணியைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி 6வது முறையாக உலகின் சிறந்த வீரருக்கான பாலன் டி'ஓர் விருதினை வென்றுள்ளார்.
- 2015 ஆம் ஆண்டு விருது மெஸ்ஸியின் முதலாவது பாலன் டி'ஓர் விருதாகும். ஒட்டுமொத்தமாக அவரது ஆறாவது விருது இதுவாகும்.
- பாலன் டி'ஓர் ஃபெமினின் (மகளிர் பலன் டி'ஓர்) என்ற விருதானது "மேகன் ராபினோ" என்பவருக்கு வழங்கப்பட்டது.
- பெண்களுக்கான இந்தச் சிறப்பு விருதானது 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு, வழங்கப் பட்டு வருகின்றது.

- தொடக்க பதிப்பிற்கான விருதை நார்வே நாட்டைச் சேர்ந்த அடா ஹெர்பெர்க் வென்றுள்ளார்.
- இந்த இரண்டு விருதுகளும் பிரான்ஸ் கால்பந்து என்ற பத்திரிகையால் ஏற்படுத்தப் பட்டன. இந்த விருதுகளுக்கு உலகெங்கிலும் உள்ள பத்திரிகையாளர்கள் அடங்கிய குழுவால் வாக்களிக்கப் பட்டன.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் 2019 – டிசம்பர் 03

- இது மாற்றுத் திறனாளிகளை நோக்கிய மக்களின் நடத்தையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் அவர்களின் உரிமைகள் குறித்து அவர்களுக்கே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் கொண்டாடப்படும் ஒரு விழிப்புணர்வு தினமாகும்.
- இந்தத் தினமானது 1992 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. அமைப்பால் ஊக்கப்படுத்தப் பட்டு வருகின்றது.
- 2019 ஆம் ஆண்டு இத்தினக் கொண்டாட்டத்தின் கருப்பொருள் "மாற்றுத் திறனாளிகளின் பங்களிப்பையும் அவர்களின் தலைமையையும் ஊக்குவித்தல்: 2030 ஆம் ஆண்டு வளர்ச்சி செயல்முறை மீது நடவடிக்கை எடுப்பது" என்பதாகும்.
- அகில இந்திய வானொலியின் நாக்பூர் நிலையமானது ஒரு தனித்துவமான முறையில் இந்த நாளைக் கொண்டாடியது.
- பண்பலைத் தலைப்புச் செய்திகள் பிரெயிலியில் தயாரிக்கப்பட்டு, அவை பார்வைக் குறைபாடுள்ள ஒரு பள்ளி ஆசிரியரான ரகுவர் குர்மியால் வாசிக்கப்பட்டன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★